## *20*

# தேவனுடைய பரிசுத்த தன்மை

## 1 பேதுரு 1:15, 16;

## வெளிப்படுத்தின விசேஷம் 15:3, 4

*"பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது" (ஏசாயா 6:3).*

1 பேதுரு 1:15, 16ம் வசனங்கள், "உங்களை அழைத்தவர் பரிசுத்தரா யிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள். நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தரா யிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" என்று கூறுகிறது. சிலுவையைப் பற்றிப் படிப்பதில் நாம் தேவனுடைய புலன் கடந்த பரிசுத்த தன்மையை எதிர்கொள்கிறோம்!

*தேவன் பரிசுத்தராக இருக்கிறார்!* நாம் தேவன் அளவுக்குப் பரிசுத்தராக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுவதில்லை; இது எவரொரு வரும் சுமக்கஇயலாத சுமையாக இருக்கும் (நடபடிகள் 15:10). தேவன் மும்மடங்கு பரிசுத்தராக இருக்கிறார். அவர், "பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தராக" இருக்கிறார் (ஏசாயா 6:3). அவர், "அன்பு, அன்பு, அன்பு" அல்லது "பிரமாணம், பிரமாணம், பிரமாணம்" உடையவராக மட்டும் இருப்பதில்லை. தேவன் தேவனாக இருக்கிறார், அது அவர் பரிசுத்தராக இருக்கிறார் என்று அர்த்தப்படுகிறது! நாம் ஏற்றுக்கொள்ளப்படுவதற்குப் பரிசுத்தத்தின்மீது பயபக்தி செலுத்த வேண்டும் அல்லது தேவகோபத்தை அனுமதிக்க வேண்டும். நாம் கோபத்தைப் புரிந்துகொள்ளாத வரையில் கிருபையை நம்மால் மதிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ இயலாது. "அன்புள்ள ஒரு தேவன் பாவியை எப்படி நரகத்திற்கு அனுப்ப முடியும்?" என்பதல்ல, ஆனால் "பரிசுத்தமான ஒரு தேவன் பாவியை எப்படி நரகத் திற்கு *அனுப்பாதிருக்க* முடியும்?" என்பதே கேள்வியாக உள்ளது.

தேவனை அவரது உண்மையான நிலையில் நாம் கண்ணோக்காது இருக்கும்போதுதான் நமது முதல் பிரச்சனை வருகிறது. நாம் தேவனை நம்மைப்போல் இருக்கும்படிக்குக் கீழே கொண்டுவரக்கூடாது. நாம் தேவனைப்போல் இருப்பதற்கு நம்மையே உயர்த்த வேண்டும். தேவனைப் பற்றிய உணர்வுப்பூர்வமான கருத்துக்கள் தேவனைப் பற்றிய மதியீனமான பேச்சுகளை விளைவிக்கின்றன. இன்றைய நாட்களில் தேவன் "உள்ளே" இருக்கிறார், ஆனால் "உள்ளே" இருக்கும் அந்தத் தேவன் ஒரு பரிசுத்தரான தேவனாக இருப்பதில்லை! இன்றைய நாட்களில் மக்கள் தேவனை

அறியவும் அவருக்குக் கீழ்ப்படியவும் மறுத்துக்கொண்டே தேவனை உணர நாடுகின்றனர் (யோவான் 17:3).

ஒரு கருத்துணர்வில் தேவன், பண்புகள் எதையும் கொண்டிருப்ப தில்லை. அவர் ஒரு மைசூர்பாகு போன்று துண்டாடப்பட இயலாது. அவர் *''பரிசுத்தராக''* இருக்கிறார்! விக்கிரகங்கள் பரிசுத்தமானவை களாக இருப்பதில்லை, அவைகள் பரிசுத்தமானவைகளாக இருக்க இயலாது! ''பரிசுத்தர்'' என்பது தேவனுடைய நாமமாக உள்ளது (ஏசாயா 57:15). தேவனுடைய ''மற்றதன்மைகள்'' பற்றி நாம் உணர்ந்தறிய வேண்டுவது அவசியமாகும்! அவர் ஒரு தர அளவைக்கு ஏற்புடையவராக இருப்பதில்லை - அவரே நிறைவான தர அளவை-யாக இருக்கிறார். அவர் முற்றான, முடிவற்ற, அவர் யாராக இருக்கிறார் என்பதை அவர் ஒருவரைத் தவிர வேறு எவராலும் புரிந்து கொள்ள இயலாத அளவுக்குத் தூய்மையானவராக இருக்கிறார். தேவ னுடைய ஆவி சத்தியத்தின் ஆவியாக உள்ளது.

நாம் தேவனைப் பற்றிய ஆச்சரியத்தில் பயபக்தியுடன் வாழ வேண்டும்! அவரது இருப்பு என்பது தனித்துவமானதாக உள்ளது. அவர் ஒன்றுகூடி பணிசெய்யும் பகுதிகளாக இருப்பதில்லை, அவர் *ஒருவராக* மாத்திரமே இருக்கிறார்! தேவன் தம்முடன்தானே எதிர்நோக்கங்களை ஒருக்காலும் கொண்டிருப்பதில்லை. அவரது ஒரு பண்பு இன்னொரு பண்புடன் முரண்படுவதில்லை. அவர் ஒரு "நடக்கும் உள்நாட்டு யுத்தமாக" இருப்பதில்லை.

தேவன் அன்பாக இருக்கிறார் (1 யோவான் 4:8, 16), ஆனால் அன்பு என்பது தேவனாக இருப்பது இல்லை. தேவன் அன்பை விளக்கப்படுத்து கிறார்; அன்பு என்பது தேவனை விளக்கப்படுத்துவது இல்லை. அன்பு என்பது பரிசுத்தம் இல்லாமல் கருத்தறிவை ஏற்படுத்துவது இல்லை. பரிசுத்தம் கேட்டுக்கொள்வதை அன்பு அளிக்கிறது. தேவன் அன்புக்கு மாத்திரம் சமமானவராக இருந்தால், தேவனுடைய ஆளுமைத்தன்மை அன்பின் பண்பாக மாத்திரம் இருக்கும். (அன்பு என்ற) இந்த ஒன்றைத் தவிர மற்ற எல்லாப் பண்புகளும் நீக்கப்படும் என்றால், இந்த ஒரு பண்பு தேவனுக்குப் பதிலியாக ஆகிறது. அன்பு என்பது தேவனுடைய பண்புகளில் ஒன்றாக உள்ளது, ஆனால் அதுவே தேவனாக இருப்பதில்லை.

பரிசுத்தம் என்பது தேவனை அவர் படைத்துள்ள படைப்புகள் மற்றும் பொய்யான தேவர்கள் ஆகியோரிடத்தில் இருந்து பிரிக்கும் தேவனுடைய தனிச்சிறந்த பண்பாக உள்ளது. இது தேவனை அவர் தமது அன்பைக் கொடாதிருக்கவும் அன்பைக் கொடுக்கவும் அனுமதிக்கிறது. "பரிசுத்தம்" என்ற வார்த்தை வேதாகமத்தில் அறுநூறுக்கும் மேற்பட்ட முறைகள் இருப்பதில் வியப்பெதுவும் இல்லை! மேலான அதிகாரம் ஒன்றுதான் கீழ்ப்படிதலைக் கட்டாயப்படுத்த முடியும். நித்தியத்துவத்தின் கடந்த காலம் முழுவதிலும், தேவனுடைய இருப்பில் ஏதொன்றும் பிரவேசித்ததில்லை, மற்றும் ஏதொன்றும் அதில் இருந்து நீக்கப்பட்டதும் இல்லை.

*நாம் பரிசுத்தர்களாக இருக்க வேண்டும்!* பரிசுத்த தன்மை என்பது மனிதர்களாக உள்ள ஒவ்வொருவருடைய கடமையாக

*இருக்க வேண்டும்! கடினமான வேளைகளில் பரிசுத்த தன்மை வீழ்ந்துபோயிருப்பது ஏன்? மனிதகுலம் அதை அனாதையாக்கியுள்ளது என்பது பரிதாபகரமாக உள்ளது. தனிப்பட்ட பரிசுத்த தன்மை என்பது வழக்கத்தில் இல்லாததாகிவிட்டது. இயேசுவைப் பொறுத்தமட்டில்கூட நாம் பரிசுத்த தன்மையை மேம்படுத்துவதில்லை. "இயேசுவின் பரிசுத்த தன்மை" என்பது பற்றி நீங்கள் கடைசியாக எப்போது கேள்விப்பட்டீர்கள்? பரிசுத்த தன்மை என்பது கிறிஸ்துவுக்கு வழியாக இருப்பதில்லை; கிறிஸ்துவே பரிசுத்த தன்மைக்கு வழியாக இருக்கிறார். கிறிஸ்தவர் இந்த உலகத்தில் வாழ்வதன்மூலம் அழிக்கப்படுவதில்லை, ஆனால் அவர் இந்த உலகத்தைத் தனக்குள் வாழ அனுமதிக்கும்போது அழிக்கப்படுகிறார். பரிசுத்த தன்மை என்பது தேவன் எனக்குக் கொடுக்கிறதாக மாத்திரமல்ல, ஆனால் தேவன் எனக்குக் கொடுத்துள்ள வாழ்வில் நான் வெளிப்படுத்த வேண்டியதாகவும் உள்ளது. பரிசுத்த தன்மை என்பது ஒரு நிலைப்பாடாக, ஒரு பழக்கமாக மற்றும் ஒரு செயல்முறையாக உள்ளது.*

*பரிசுத்த தன்மையை, விலைமலிவான, தவறான ஆவிக்குரிய தன்மைக்காக மாற்ற முடியாது. ஆவிக்குரிய தன்மை என்பது தன்னைப்பற்றிப் பொய்யுரைக்க அல்லது தற்பெருமைகொள்ளக்கூடும்; பரிசுத்த தன்மை என்பது தன்னைப் பற்றி அவ்வாறு செய்ய இயலாது. ஒரு நபர், தான் தாழ்மையாக இருப்பது பற்றிப் பெருமைகொள்ள முடியுமா? மாபெரும் ஒழுக்கங்களைக் கொண்டுள்ளவர்கள் வழக்கமாகத் தாங்கள் அவற்றைக் கொண்டுள்ளதை அறியாதிருக்கிறார்கள் என்பது முரண்பாடு போல் தோன்றும் மெய்யுரையாகும். தாழ்மையான மக்கள் தங்கள் தாழ்மையை மறுக்கின்றனர்!*

*பரிசுத்தம் இல்லாமல் நாம் தேவனைத் தரிசிக்க முடியாது (எபிரெயர் 12:14). நமது இருதயங்கள் தேவனுக்கு முன்பாகப் பரிசுத்தத்தில் குற்றமற்று இருக்க வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 3:12, 13). நாம் தேவபயத்தில் பரிசுத்த தன்மையைப் பூரணப்படுத்த வேண்டும் (2 கொரிந்தியர் 7:1) மற்றும் நாம் அவரது பரிசுத்தத்தில் பங்கேற்பவர்களாக இருக்க வேண்டும் (எபிரெயர் 12:10).*

*சிலுவையைத் தவிர ...*
*வேறு வழி எதுவும் இல்லை!*